


. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்

DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936




www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 08.07.2026 • மலர் 04 • இதழ்: 189 • புதன்கிழமை • Edition : Nagercoil • 08.07.2026 • Vol : 04 • Issue : 189 • Page : 4 • Rs. 5/-

# ஆடு திருடி சிறை சென்றவர்களுக்கு அரசு வழக்கறிஞர் பதவியா?

## த.வெ.க. அரசுக்கு எடப்பாடி பழனிசாமி கண்டனம்



சென்னை, ஜூலை 8

அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

'அனுபவமற்றவர்கள் ஒன்று கூடி மடம் கட்டுவது' போல், ஒரு ஆட்சியை த.வெ.கவினர் அமைத்துள்ளனர். ஆனால், மடத்தை எப்படி பராமரிப்பது என்று திணறுகிறார்கள். தேர்தல் நேரத்தில் வாயில் வந்ததையெல்லாம் வாக்குறுதிகளாக இந்த மகானுபவர்கள் அளித்துவிட்டு, அவைகளை நிறைவேற்றுவது எப்படி என்று தெரியாமல் திணறுகிறார்கள். கடிவாளம் இல்லாத குதிரை போல் இந்த ஆட்சி தறிகெட்டு ஓடுகிறது. த.வெ.க. எப்படி தட்டுத் தடுமாறி ஆட்சிக்கு வந்ததோ, அதேபோல், கீழமை நீதிமன்றங்களில் அரசு வழக்கறிஞர்கள் இல்லாமல் நீதி பரிபாலனமும் தடுமாறிக் கொண்டிருக்கிறது. கடந்த தி.மு.க ஆட்சியில் நியமிக்கப்பட்ட அரசியல் ரீதியான அரசு வழக்கறிஞர்கள் அனைவரும், ஆட்சி மாற்றம் ஏற்பட்ட உடனேயே விலகி விட்டார்கள் என்று தெரிகிறது. அந்த இடங்களுக்கு அரசு வழக்கறிஞர்களை நியமிக்க பல லட்சம் ரூபாய் வரை பேரம் பேசப்படுவதாக செய்திகள் வெளிவந்துள்ளன. இந்தக் குற்றச்சாட்டை நாங்கள்சொல்லவில்லை. த.வெ.க. கட்சியைச் சார்ந்த பெண் வழக்கறிஞர் ஒருவரே நீதிமன்றத்தில் முறையிட்டுள்ளார்.

தமிழகத்தில் உள்ள அனைத்து கீழமை நீதிமன்றங்களிலும் வழக்கறிஞர்கள் இல்லாத காரணத்தால் விசாரணைகள் பாதிக்கப்படுகின்றன. உதாரணமாக, ஒரு மாவட்ட நீதிபதி, விசாரணைக்கு வந்த சாட்சியிடம் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யாததால், மீண்டும் அவரை நீதிமன்றத்திற்கு வரவழைப்பதற்காக, அவருக்கு பயணப்படி வழங்க அரசுக்கு உத்தரவிடப்படும் என்று எச்சரித்துள்ளார். அரசின் சார்பாக, அரசு வக்கீல்கள் நியமிக்கப்படுவதற்கு தாமதம் ஏற்பட்டாலும், உதவி அரசு குற்றவியல் வழக்கறிஞர்களாக செயல்படும், அரசு நீதித் துறையினர் கீழமை நீதிமன்ற பணிகளுக்குச் செல்லாமல் இருப்பதன் காரணம் என்ன என்பது புரியாத புதிராக இருக்கிறது.

அரசு நிர்வாகத்திற்கு பொய்க்கால் குதிரை ஆட்சியாளர்கள் புதியவர்கள் என்பதை மறுப்பதற்கில்லை. எனவே, அனுபவமிக்க சட்டத் துறையினரை அணுகி, தமிழகம் முழுவதும் முறையாக திறமையான அரசு வழக்கறிஞர்களை உடனடியாக நியமித்து, நீதி பரிபாலனத்தை சீரமைக்க வேண்டும் என்று இந்த த.வெ.க. அரசை வலியுறுத்துகிறேன்.

சாதாரண ஏழை, எளிய மக்களுக்கு ஒரு சிவில் பிரச்சனையால் பாதிப்பு என்றாலும், ஒரு கிரிமினல் பிரச்சினையால் பாதிப்பு என்றாலும் அவர்களின் கடைசி புகலிடமும், நம்பிக்கையும் நீதிமன்றங்கள்தான். முறையாக அரசு வழக்கறிஞர்கள் இல்லாத காரணத்தால், வழக்குகள் தள்ளிப்போகும்போது, வழக்காடிகள் அவர்களுடைய வழக்கறிஞர்களுக்கு 'பீஸ்கட்டணம்' கொடுக்க முடியாமல் திணறும் சூழ்நிலையும் உருவாகும். சிறு குழந்தைகள் கடல் மணலில் கோபுரம் கட்டி விளையாடுவதுபோல் இந்த ஆட்சியாளர்கள், அரசை கையில் வைத்துக்கொண்டு விளையாட்டு காட்டி வருவது ஏற்கத்தக்கதல்ல. நீதித்துறை மட்டுமல்ல, பல்வேறு துறைகளிலும் இதுபோன்ற சூழ்நிலைகள் இருப்பதாக பொதுமக்களிடமிருந்து புகார்கள் வருகின்றன. இந்தப் புகார்கள் எல்லாம் முதல்அமைச்சரின் காதுகளில் விழுகிறதா என்றே தெரியவில்லை. ஆகாயத்தில் கோட்டை கட்டாமல், அரசாட்சி கையில் என்றநிலையைஉணர்ந்து, வாக்களித்த மக்களுக்கு எந்தவித சிரமமும் இல்லாமல் செயல்பட வேண்டும் என்று த.வெ.க. அரசை வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## பொதுமக்களுக்கு சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி




திருப்பூர் ஜூலை 8

நாம் தினசரி பயன்படுத்தும் சாலைகளில் பாதுகாப்பாக செல்வது பற்றியும் மாணவர்கள் அனைத்து போக்குவரத்து விதிகளையும் பின்பற்ற வேண்டும் என்பது பற்றியும் அவர்களுக்கு விரிவாக எடுத்து சொல்லப்பட்டது. மாணவர்களின் லட்சியங்கள் கொள்கைகள் கல்வி மூலம் தொழில்கள் வேலை வாய்ப்பு பெற்று வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்றால் அதற்கு முதலில் நாம் உடலில் உயிர் இருக்க வேண்டும் நமது உடல் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்றும் பொதுமக்களுக்காக விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

திருப்பூர்மாநகரபோக்குவரத்துகாவல் உதவி ஆணையாளர் ஏ. சேகர் வடக்கு போக்குவரத்து காவல் ஆய்வாளர் .எஸ். ஆர். ரமேஷ். ஏ.வி.பி. பேராசிரியர் தீபிகா அவிநாசி சாலையில் தனியார் ஹோட்டல் முன்பு 300க்கு மேற்பட்ட மாணவ,மாணவிகள், சாலை போக்குவரத்து விழிப்புணர்வு பேரணியில் கலந்து கொண்டனர்.

## 10 ஆம் வகுப்பு 12ஆம் வகுப்பு வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்கு பரிசளிப்பு விழா



வேலூர், ஜூலை 8

குடியாத்தம் செரு வங்கி அண்ணா நகர் பவன் உள் விளையாட்டு அரங்கத்தில்பாபாசாகேப் டாக்டர்B.R. அம்பேத்கர் கல்வி அறக்கட்டளை சார்பில் 10 ஆம் வகுப்பு 12ஆம் வகுப்பு வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்கு பரிசளிப்பு விழா நடைபெற்றது. கல்வி அறக்கட்டளை தலைவர் இரா. பாஸ்கர் தலைமை தாங்கினார். இரா. முத்துக்குமார் வரவேற்புரை ஆற்றினார். கருத்தியல் தலைவர்கள் புலவர் சுப்ரமணி ஆசிரியர்கள்ஏகாம்பரம்சம்பத்கண்ணன்கோடீஸ்வரன் முன்னிலை வகித்தனர். இந்திய குடியரசு கட்சி வேலூர் மண்டல செயலாளர் இராசி. தலித் குமார் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார். வழக்கறிஞர் பாலகுமரன் செந்தமிழ் சரவணன் வாழ்த்துரை வழங்குகினர்.விழா ஏற்பாடுகளை அரசு போக்குவரத்து கழக தயாளன் நீதித்துறை ராஜா ஏற்பாடு செய்தார்கள். உடன் பாபா சாகேப் டாக்டர்.B.R. அம்பேத்கர் கல்வி அறக்கட்டளை உறுப்பினர்கள் குப்புசாமி அமிர்தலிங்கம் ஜம்புநாதன் முருகன் மற்றும் பலர் கலந்து கொண்டனர் முடிவில் பொருளாளர் பேங்க் மேலாளர் ஓய்வு சிவமணி நன்றி கூறினார்.

## தேனி மாவட்ட ஆட்சியரகத்தின் புதிய கூட்டரங்கில், மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டம்



தேனி, ஜூலை 8

தேனி மாவட்ட ஆட்சியரகத்தின் புதிய கூட்டரங்கில், மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு தேனி பாராளுமன்ற உறுப்பினரும், மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுத் தலைவருமான தங்க தமிழ்செல்வன் தலைமை தாங்கினார். மாவட்ட கலெக்டர் இரா. வைத்திநாதன் முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில், மத்திய மற்றும் மாநில அரசுகளின் வளர்ச்சித் திட்டங்கள், மாவட்டத்தில் நடைபெற்று வரும் சாலை, குடிநீர், மின்சாரம், சுகாதாரம், கல்வி, வேளாண்மை, வனத்துறை, உள்ளாட்சித் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து விரிவாக ஆய்வு செய்யப்பட்டது. மேலும், பொதுமக்களுக்கு அரசுத் திட்டங்களின் பயன்கள் முழுமையாக சென்றடைவதை உறுதி செய்ய அதிகாரிகளுக்கு தேவையான ஆலோசனைகள் மற்றும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

இக்கூட்டத்தில் பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் க. சபரி ஐங்கரன், கம்பம் சட்டமன்ற உறுப்பினர் பி.எல்.ஏ. ஜெகநாத் மிஸ்ரா, ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் ஆ. மகாராஜன், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) ரஜத்பீடன், இ.ஆ.ப., துணை இயக்குநர் (ஸ்ரீவில்லிப்புத்தூர் மேகமலை புலிகள் காப்பகம்) விவேக்குமார் பி. யாதவ், இ.வ.ப., மாவட்ட வன அலுவலர் ஜி. கிரண், மாவட்ட வருவாய் அலுவலர் ப. ராஜகுமார், உதவி வனப்பாதுகாவலர் சாய்சரண் ரெட்டி, இ.வ.ப., கூடுதல் காவல் கண்காணிப்பாளர் கலைகதிரவன் உள்ளிட்ட பல்வேறு துறை அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டு தங்களது துறைகளின் செயல்பாடுகள் குறித்து விளக்கமளித்தனர்.

இந்தக் கூட்டத்தின் மூலம், மாவட்ட வளர்ச்சிப் பணிகளை விரைவுபடுத்துதல், திட்டங்களை தரமாகவும் காலக்கெடுவிற்குள் நிறைவேற்றுதல், பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு முன்னுரிமை அளித்து நடவடிக்கை மேற்கொள்ளுதல் மற்றும் அனைத்துத் துறைகளும் ஒருங்கிணைந்து செயல்படுதல் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

## குமரி மாவட்ட கடலோரப் பகுதிகளில் கடல் சீற்றம் 2.9 மீட்டர் உயரத்திற்கு ராட்சத அலைகள் எழ வாய்ப்பு

நாகர்கோவில், ஜூலை. 8

கன்னியாகுமரி மாவட்ட கடலோரப் பகுதிகளில் கடல் அலைகளின் சீற்றம் மற்றும் கடல் நீரோட்டத்தின் வேகம் அதிகரிக்ககூடும் என்று வானிலை ஆய்வு மையம் மற்றும் கடல்சார் ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தின் நீரோடி முதல் ஆரோக்கியபுரம் வரையிலான கடலோரப் பகுதிகளில் கடல் அலைகள் வழக்கத்தை விட அதிகமாக உயரத்தில் எழகக்கூடும் என்று கணிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக ஜூலை 8ம் தேதி (இன்று) இரவு 11:30 மணி வரை சுமார் 2.7 மீட்டர் உயரம் முதல் 2.9 மீட்டர் வரை உயரமான ராட்சத அலைகள் வீச வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேபோல் கடலோர பகுதிகளில் கடல் நீரோட்டத்தின் வேகமும் அதிகரிக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஜூலை 8ம் தேதி இரவு 7 மணி வரை கடல் நீரோட்டத்தின் வேகம் வினாடிக்கு 0.7 முதல் 0.9 மீட்டர் வரை இருக்கக்கூடும். தற்போது இந்த எச்சரிக்கை கண்காணிப்பு நிலையில் வைக்கப்பட்டுள்ளது. உடனடியாக பாதுகாப்பு நடவடிக்கை ஏதும் தேவையில்லை என்றாலும், கடலோரப் பகுதி மக்கள், மீனவர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் மிகுந்த கவனத்துடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கடல் சீற்றம் குறித்த அடுத்தடுத்த தகவல்களை தொடர்ந்து கவனிக்கப்படும். அதிகாரப்பூர்வ அறிவிப்புகளை மக்கள் பின்பற்றுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். கடலோரப் பகுதிகளில் வசிப்பவர்கள் கடலுக்கு அருகில் செல்வதை தவிர்க்குமாறு எச்சரிக்கப்பட்டுள்ளது. என்று இந்திய கடல்சார் ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

## சுசீந்திரம் அருகே மோட்டார் சைக்கிளில் நிலை தடுமாறி கீழே விழுந்தவர் பரிதாப சாவு

சுசீந்திரம், ஜூலை 8

பூதப்பாண்டி அருகே உள்ள நாவல்காடு பகுதியை சேர்ந்தவர் ஈசாக்கு இவரது மகன் ஜெபின் வயது 29, இவர் நாகர்கோவில் ஒழுகினசேரியில் உள்ள டெரிக் பைக் ஷோரூமில் சர்வீஸ் வேலை செய்து வந்தார். சம்பவத்தன்று (05072026) இவர் மருங்கூரில் உள்ள திருமண நிகழ்ச்சிக்கு சென்று விட்டு வீட்டிற்கு செல்வதற்கு வேண்டி அவருக்கு சொந்தமான மோட்டார் சைக்கிளில் அவருடைய நண்பர் கடுக்கரை பிள்ளையார் கோவில் தெருவை சேர்ந்த அமர்நாத் வயது 23,

என்பவரை அமர வைத்து இவர் மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்தார். மருங்கூரில் இருந்து குலசேகரன்புதூர் செல்லும் ரோட்டில் சங்கரன்புதூர் பகுதியில் வந்து கொண்டிருக்கும் பொழுது எதிர்பாராத விதமாக இவரது மோட்டார் சைக்கிள் நிலை தடுமாறி கீழே விழுந்ததில் ஜெபினுக்கு தலை,முகம், மார்பில் பலத்த காயம் ஏறபட்டிருந்தவரை அக்கம்பக்கத்தினர் மீட்டு சிகிச்சைக்காக ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு சிகிச்சையில் இருந்த ஜெபின் அன்று இரவே ( 572026) சிகிச்சை பலனின்றி பரிதாபமாக இறந்து போனார். இது குறித்து ஜெபினின் தந்தை ஈசாக்கு சுசீந்திரம் காவல் நிலையத்தில் நேற்று முன்தினம் புகார் அளித்தார். புகாரின் பேரில் சுசீந்திரம் போலீஸ் இன்ஸ்பெக்டர் அருள் பிரகாஷ், சப்இன்ஸ்பெக்டர் தனீஷ் லியோன் ஆகியோர் வழக்கு பதிவு செய்து விசாரணை செய்து வருகின்றனர்.

## உயர்கல்வி பயில விரும்பும் மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்: கலெக்டர் தகவல்




தேனி, ஜூலை 8

தேனி மாவட்ட கலெக்டர் இரா. வைத்திநாதன் செய்திக்குறிப்பில் தெரிவித்ததாவது,

தேனி மாவட்டத்தில் உயர்கல்வி பயில விரும்பும் மாணவர்கள் வங்கிகளில் ரூ.7.5 இலட்சம் வரை பிணையம் இல்லாமல் கடன் பெறுவதற்கு https://pmvidyalaxmi.co.in/ என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம்.விண்ணப்பிக்கும்பொழுது மாணவர்களின் ஆதார்அட்டை, கல்லூரி சேர்க்கை கடிதம், கல்வி கட்டணம், 10 மற்றும் 12ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ், வங்கி கணக்குப் புத்தகம், பெற்றோர்களின் வருமானச் சான்றிதழ் மற்றும் பெற்றோர்களின் ஆதார் அட்டை, வருமான வரி அட்டை, வங்கி கணக்கு புத்தகம் ஆகிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்க வேண்டும். மேலும், மாணவர்கள் மூன்று வங்கிகளில் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட கலெக்டர் இரா.வைத்திநாதன், தெரிவித்துள்ளார்.

## முன்னாள் அமைச்சர் மு.பெ சாமிநாதனின் முன்னாள் உதவியாளர் முருகேசன் மீது உறவினர் பாலமுருகன் அடுக்கடுக்கான குற்றச்சாட்டு



திருப்பூர்:ஜூலை08

திருப்பூரில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில், முன்னாள் அமைச்சர் மு.பெ சாமிநாதனின் உதவியாளராக இருந்ததாகக் கூறப்படும் வழக்கறிஞர் முருகேசன் மீது, அவரது உறவினரும் ஸ்ரீ செல்லாண்டி அம்மன் டிரேடர்ஸ் மற்றும் பாலா காட்டன்ஸ் நிறுவனங்களின் உரிமையாளருமான எஸ். பாலமுருகன் பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்தார்.

கடந்த 12 ஆண்டுகளாக பொய்யான புகார்கள், அவதூறு பிரச்சாரங்கள் மற்றும் தேவையற்ற சட்ட நடவடிக்கைகள் மூலம் தனது தொழிலுக்கு தொடர்ந்து இடையூறு ஏற்படுத்தியதாக அவர் குற்றம்சாட்டினார். தனது நிறுவனத்திற்கு எதிராக பல்வேறு துறைகளில் நூற்றுக்கணக்கான புகார்கள் அளிக்கப்பட்டதாகவும், அதன் காரணமாக பல கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துகளை குறைந்த விலைக்கு கைப்பற்ற முயற்சி செய்யப்பட்டதாகவும் தெரிவித்தார்.

மேலும், கடந்த காலத்தில் உயர்நீதிமன்றத்தால் ஆதாரமின்மையால் முடிவுக்கு வந்த ஒரு வழக்கை தற்போது தவறாக சித்தரித்து தனது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் முருகேசன் பேசி வருவதாகவும் பாலமுருகன் குற்றம்சாட்டினார்.

இதுதொடர்பாக ரூ.12 கோடி மான நஷ்ட ஈடு கோரி உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளதாகவும், தன்னிடம் உள்ள அனைத்து ஆவணங்களையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், அரசு அதிகாரிகள் மற்றும் காவல்துறையினர் இந்த விவகாரத்தில் முழுமையாக விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பாலமுருகன் வலியுறுத்தினார்.

# அதியமான்கோட்டை தட்சணகாசி காலபைரவர் ஆலயத்தில் தேய்பிறை அஷ்டமி விழா .



தருமபுரி ஜூலை 08

தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளி வட்டம் அதியமான்கோட்டையில், மன்னர் அதியமான் கட்டியதாகக் கருதப்படும் தட்சணகாசி காலபைரவர் ஆலயத்தில் இன்று தேய்பிறை அஷ்டமி விழா பக்தி பரவசத்துடன் நடைபெற்றது . காசிக்கு அடுத்ததாக காலபைரவருக்கென அமைந்துள்ள தனிச்சிறப்பு மிக்க இந்த ஆலயத்தில், மாதந்தோறும் தேய்பிறை அஷ்டமி நாளில் தமிழகம் மட்டுமின்றி கர்நாடக மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தருவது வழக்கம். நேற்று அதிகாலை சிறப்பு யாகத்துடன் விழா தொடங்கியது. தொடர்ந்து காலபைரவருக்கு சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது. பின்னர், அர்த்தநாரீஸ்வரர் அலங்காரத்தில் காலபைரவர் பக்தர்களுக்கு அருள்பாலித்தார். காலை முதலே ஏராளமான பக்தர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து சுவாமி தரிசனம் செய்தனர். கர்நாடக மாநிலம் பெங்களூரு உள்ளிட்ட பகுதிகளிலிருந்து வந்த பக்தர்கள் பூசணி தீபம் ஏற்றி தங்களது நேர்த்திக்கடனை செலுத்தி வழிபட்டனர். விழாவில் பங்கேற்ற அனைத்து பக்தர்களுக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது. பக்தர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய காவல்துறையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர்.

### பென்னாகரத்தில்

# மை பாரத் கேந்திரா தருமபுரி மற்றும் ஸ்ரீ அங்காளம்மன் பாராமெடிக்கல் கல்லூரி இணைந்து நடத்திய டாக்டர். சியாமா பிரசாத் முகார்ஜி பிறந்தநாள் விழா



தருமபுரி ஜூலை 08

தருமபுரி மாவட்டம் பென்னாகரத்தில் இந்திய அரசு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகம் மை பாரத் கேந்திராதருமபுரி மற்றும் ஸ்ரீ அங்காளம்மன் பாரா மெடிக்கல் கல்லூரி பென்னாகரம் , கடல் புறா இளைஞர் நற்பணி மன்றம் தருமபுரி இணைந்து நடத்தியடாக்டர். சியாமா பிரசாத் முகர்ஜியின் 125 ஆவது பிறந்தநாள் விழா பென்னாகரத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு ஸ்ரீ அங்காளம்மன் பாரா மெடிக்கல் கல்லூரியின் இயக்குனர் சிலம்பரசன் தலைமை வகித்தார். கடல் புறா இளைஞ நற்பணி மன்றத்தின் தலைவர் வெங்கடேஷ் வரவேற்புரை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக பென்னாகரம் சட்டமன்ற உறுப்பினர் கஜேந்திரன் மற்றும் பென்னாகரம் காவல் உதவி ஆய்வாளர் சக்திவேல் அங்காளம்மன் பாரா மெடிக்கல் கல்லூரியின் ஆசிரியர்களான கலா, சுதா, கிறிஸ்டினா, சரஸ்வதி மற்றும் அதியமான் டிவியின் இயக்குனர் கபில்தேவ், சமூக ஆர்வலர் நஞ்சப்பன் ஆகியோர் கலந்து கொண்டு இந்த நிகழ்ச்சியை சிறப்பித்தனர். முன்னதாக சியாமா பிரசாத் முகர்ஜியின் திரு உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டு அவருடைய வாழ்க்கை வரலாறு மற்றும் சாதனைகள் பற்றி பங்கேற்பாளர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் கட்டுரை, ஓவியம் ,கலை நிகழ்ச்சி போன்ற போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் மை பாரத் தருமபுரி சார்பில் வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து தூய்மை பறிமுகமானது நடத்தப்பட்டது. மேலும் விழிப்புணர்வு பேரணி நடத்தப்பட்டது. இறுதியாக மை பாரத் கேந்திராவின் அலுவலக பணியாளர் ரா. முனியப்பன் நன்றி கூறினார்.

### போக்குவரத்து துணை ஆணையாளர் தலைமையில்

# ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு



மதுரை ஜூலை:8

மதுரை மாநகர போக்குவரத்து காவல்துறை சார்பில் ஆட்டோ ஓட்டுநர்களுக்கான சாலை பாதுகாப்புவிழிப்புணர்வு முகாம் மதுரை குருதியேட்டர்சந்திப்பில் உள்ள லட்சுமி மஹாலில் போக்குவரத்து காவல் துணை ஆணையர் S. வனிதா அவர்கள் தலைமையில் நடைபெற்றது இதில் ஆட்டோ ஓட்டுநர்கள் கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள் குறித்து ஆலோசனைகள் வழங்கப்பட்டது இந்நிகழ்வில் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு விபத்தில்லா சாலை, ஓட்டுநர் உரிமத்தின் அவசியம், பயணிகளின் பாதுகாப்பு, வாகனத்தின் உறுதிச்சான்று, வாகன எண்ணின் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது இறுதியாக போக்குவரத்து காவல் ஆய்வாளர்கள் மற்றும் போக்குவரத்து உதவி ஆய்வாளர்கள் தலைமையில் விபத்தில மதுரையை உருவாக்கிட ஆட்டோ ஓட்டுநர்கள் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர் இந்நிகழ்வில்போக்குவரத்துகாவல்ஆய்வாளர்கள் செந்தில் சுரேஷ், செந்தில்குமார், தங்கமணி, கணேஷ்ராம், சோபனா, பஞ்சவர்ணம், பூர்ணகிருஷ்ணன் மற்றும் சார்பு ஆய்வாளர்கள் சந்தனகுமார், லிங்க்ஸ்டன், ஆண்டவர் TNSTC மேலாளர் அசோக்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்,

### நாகர்கோவில் அருகே

# நள்ளிரவில் மின்கம்பத்தில் மோதி கவிழ்ந்த டாரஸ் லாரி; கிராமங்கள் இருளில் மூழ்கின



நாகர்கோவில், ஜூலை.8

நாகர்கோவிலில் இருந்து ராஜாக்கமங்கலம் நோக்கி நேற்று முன்தினம் இரவு டாரஸ் லாரி ஒன்று சென்று கொண்டிருந்தது. எறும்புக்காடு அருகே வைத்து எதிரே வந்த வாகனத்திற்கு வழி விடும்போது, திடீரென கட்டுப்பாட்டை இழந்து சாலை ஓரத்தில் இருந்த மின்கம்பத்தில் மோதி லாரி கவிழ்ந்தது. இதில் லாரியில் இருந்த ஜல்லிகள் சாலையில் சிதறின. டிரைவர் படுகாயத்துடன் தப்பினார்.

இந்த விபத்து குறித்து அறிந்ததும் ஆசாரிப்பள்ளம் மற்றும் ராஜாக்கமங்கலம் போலீசார்சம்பவ இடத்திற்கு சென்று படுகாயம் அடைந்த டிரைவரை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். லாரி மோதியதில் மின்கம்பம் உடைந்தது மின் ஒயர்கள் அறுந்து விழுந்தன. இதனால் மின்சாரம் துண்டிக்கப்பட்டு பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது. மேலும் எறும்புகாடு மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதியில் உள்ள கிராமங்கள் இருளில் மூழ்கின. மின்வாரிய அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று தொடர்ந்து அந்த பகுதியில் மீட்பு பணியை நடத்தினர். நேற்றும் மீட்பு பணி தொடர்ந்து நடந்தது. விபத்துக்கான காரணம் குறித்து ராஜாக்கமங்கலம் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தமிழக வெற்றிக் கழக தொழிற்சங்க பேரவை அரசு பேருந்து ஓட்டுநர் நடத்துனர்கள் சந்திப்பு



திருப்பூர் ஜூலை:08

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த திருப்பூர் மண்டலம் மற்றும் பழனி கிளைகளில் பணிபுரியும் தமிழக வெற்றிக் கழக தொழிற்சங்க பேரவையை துவக்குவதற்கான ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினரும் திருப்பூர் மாநகர் மாவட்ட செயலாளர் பாலமுருகன் அவர்களை சந்தித்து ஆலோசனை நடைபெற்றது. தொடர்ந்து இன்னும் சில நாட்களில் அந்தந்த கிளைகளில் பெயர் பலகை வைக்கப்பட்டு கொடிக்கம்பம் அமைக்கப்படும் என ஓட்டுநர்கள் நடத்துனர்கள் தெரிவித்தனர்.



### அருமனை அருகே

# கோழி கழிவுகளுடன் சென்ற வாகனம் பறிமுதல்; 2 பேர் மீது வழக்கு

மார்த்தாண்டம், ஜூலை. 8

அருமனை அருகே உள்ள மேல்புறம் சாலை வழியாக கடையாலுமூடு நோக்கி கோழி கழிவுகளை ஏற்றிக்கொண்டு மினி லோடு வாகனம் ஒன்று இரவில் சென்று கொண்டிருந்தது. அப்போது அதிலிருந்து அளவுக்கு அதிகமாக துர்நாற்றம் வீசியது. இது தவிர அந்த வாகனத்தின் பின்னால் பைக்கில் சென்றவர்கள் மீது கழிவு வாகனத்தில் இருந்து வடிந்த தண்ணீர் தெறித்தது. இதனால் ஆத்திரமடைந்த பொதுமக்கள் மினி லோடு வேனை பின் தொடர்ந்து சென்று உத்தரங்கோடு பகுதியில் தடுத்து நிறுத்த முயன்றனர். ஆனால் வாகன ஓட்டுநர் வேகமாக சென்றதால் கழிவுகளில் உள்ள நீர் மீண்டும் பொதுமக்கள் மீது தெறித்தது. பின்னர் முழுக்கோடு பகுதியில் சென்றபோது பின் தொடர்ந்து பின்னர் அருமனை காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். புகாரின் பெயரில் போலீசார் வாகனத்தை ஓட்டி வந்த குலசேகரம் பகுதியை சேர்ந்த மகேஷ் என்ற லூக்கா (52) என்பவர் மேலும் வழக்கு பதிவு செய்தனர் .

### கன்னியாகுமரி அருகே

# காதல் திருமணம் செய்த தொழிலாளி தற்கொலை

கன்னியாகுமரி, ஜூலை. 8

கன்னியாகுமரி அருகே உள்ள கொட்டாரம் பகுதியை சேர்ந்தவர் முத்தரசி மகன் கரன் (28). இவர் கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு வள்ளியூரை சேர்ந்த அபிராமி என்ற பெண்ணை காதலித்து திருமணம் செய்துள்ளார். ஆனால் அவர்களுக்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்டு அபிராமி பிரிந்து சென்று விட்டார். இதனால் கரன் கடும் மன விரக்தியில் இருந்துள்ளார். மேலும் மதுப்பழக்கம் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

தற்போத கடந்த ஒரு ஆண்டாக மதுப்பழக்கத்தை குறைத்து வந்துள்ளார். மேலும் கட்டிட வேலைக்கு சென்று வந்தார். இந்த முறையில் கடந்த 3 மாதங்களுக்கு முன்பு பழவூரை சேர்ந்த முருகன் என்பவர் மகள் மாசான பேச்சியை காதலித்து திருமணம் செய்து கொண்டார். ஆனால் கரனின் மதுப்பழக்கத்தால் அவர்களுக்குள் அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்துள்ளது.

இந்தநிலையில்சம்பவதினம்கணவன்மனைவியுடைய தகராறு ஏற்பட்டுள்ளது. அப்போது மாசான பேச்சி பாத்ரூம் சென்ற நேரம் கரன் படுக்கை அறையில் தூக்கிட்டு தற்கொலை செய்ய முயன்றார். இதை கண்ட உறவினர்கள் அவரை மீட்டு ஆம்புலன்ஸ் மூலம் குமரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை கொண்டு சென்றனர். ஆனால் அவரை பரிசோதித்த டாக்டர்கள் கரன் ஏற்கனவே இறந்து விட்டதாகதெரிவித்தனர். சம்பவம் குறித்துகன்னியாகுமரி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்

### நாகர்கோவிலில்

# மூதாட்டி வீட்டில் கொள்ளை 10 மாதங்களுக்கு பின் வழக்கு

நாகர்கோவில், ஜூலை. 8

நாகர்கோவில் மூவேந்தர் நகர் பகுதியை சேர்ந்தவர் அருமைதங்கம் (72). இவரது கணவர் ராஜமணி ஏற்கனவே இறந்துவிட்ட நிலையில் அருமை தங்கம் தனியாக வசித்து வருகிறார். கடந்த 26 .8 . 2025 அன்று அருமை தங்கம் வீட்டுக்குள் கண்டால் தெரியும் 30 வயது மதிக்கப்பட்ட நபர் ஒருவர் புகுந்து அவரது முகத்தில் மயக்கப் பொடி தூவி, வீட்டிலிருந்து 2 பவுன் எடை உள்ள தங்க செயின் மற்றும் வீட்டு உபயோகப் பொருட்கள், மற்றும் ரூபாய் 18 ஆயிரம் ரொக்க பணம் போன்றவற்றை திருடி சென்று விட்டார். இது குறித்து அப்போது காவல் நிலையத்தில் புகார் அளித்து, போலீசார் சென்று விசாரித்தும் உள்ளதாக கூறப்படுகிறது. ஆனால் தடயங்கள் ஏதும் இல்லாததால் போலீசார் வழக்கு பதிவு செய்யவில்லை. இந்த நிலையில் இது குறித்து வழக்குப்பதிந்து நடவடிக்கை எடுக்க கோரி அருமை தங்கம் சார்பில் நாகர்கோவில் குத்தவியல் நீதிமன்றம் 2ல் மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த மனுவை விசாரித்த நீதிமன்றம், போலீசார் இந்த புகாரின் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்த உத்தரவிட்டது. அதன் பேரில் சம்பவம் நடந்து சுமார் 10 மாதங்களுக்கு பின் அருமை தங்கம் புகாரின் பேரில் நேசமணி நகர் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்துள்ளனர். 30 வயது மதிக்கத்தக்க கண்டால் தெரியும் நபர் என கூறப்படும் நபர் மீது வழக்கு பதிவு செய்து இருக்கிறார்கள். மேலும் போலீசார் தனிப்படை அமைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

### நீர் நிலைகளில் மீட்பது எப்படி?

# அகரம் அரசுப் பள்ளியில் தீயணைப்புத் துறையின் ஒத்திகை



கிருஷ்ணகிரி, ஜூலை 8

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அருகே உள்ள அகரம் கிராமத்து அரசு மேல்நிலைப் பள்ளியில் இன்று மாணவர்களுக்கான பேரிடர் மேலாண்மை மற்றும் மீட்புப் பணிகள் குறித்த விழிப்புணர்வு ஒத்திகை நிகழ்ச்சி நடைபெற்றது.

அண்மைக்காலமாக நீர் நிலைகளில் ஏற்படும் விபத்துக்களைத் தவிர்க்கும் பொருட்டு, போச்சம்பள்ளி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை சார்பில் இந்தச் சிறப்பு முகாம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. போச்சம்பள்ளி தீயணைப்பு நிலைய அலுவலர் (பொறுப்பு) சீனிவாசன் தலைமையில் தீயணைப்பு வீரர்கள் மாணவர்களுக்குப் பல்வேறு செயல்முறை விளக்கங்களைச் செய்து காண்பித்தனர்நீர் நிலைகளில் யாராவதுசிக்கிக்கொண்டால்,அவர்களை எப்படிப் பாதுகாப்பாக மீட்பது என்பது குறித்து விளக்கப்பட்டது. ஆபத்தான கட்டத்தில்,வீட்டில்எளிதாகக்கிடைக்கும் காலியான பிளாஸ்டிக் கேன்களைப் பயன்படுத்திப் பாதிக்கப்பட்டவர்கள் நீரில் மூழ்காமல் தங்களைப் பிடித்துக் கொண்டு தற்காத்துக் கொள்ளும் வகையில், அவற்றை எப்படி வீச வேண்டும் என்ற ஒத்திகை செய்து காட்டப்பட்டது. வெள்ளம் மற்றும் நீர் நிலை விபத்துகளின் போது பதற்றமடையாமல் செயல்படுவது குறித்து மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மாணவர்கள் இத்தகைய எளிய பேரிடர் கால உத்திகளைக் கற்றுக் கொள்வதன் மூலம், தங்களைச் சுற்றியுள்ளவர்களின் உயிர்களை ஆபத்தான நேரங்களில் காப்பாற்ற முடியும் என்று தீயணைப்புத்துறையினர் தெரிவித்தனர். இந்தவிழிப்புணர்வுஒத்திகைநிகழ்ச்சியில் பள்ளியின் தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள் மற்றும் நூற்றுக்கணக்கான மாணவர்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டு பயன்பெற்றனர். தீயணைப்புத் துறையினரின் இந்த உபயோகமான செயல்முறை விளக்கம் பள்ளி நிர்வாகம் மற்றும் பொதுமக்களிடையே பெரும் பாராட்டைப் பெற்றுள்ளது.



### தி.மு.க. ஆட்சியில் பத்திரப்பதிவு துறையில்

# ரூ.10 ஆயிரம் கோடி அளவுக்கு அரசுக்கு வருவாய் இழப்பு

## முதல்அமைச்சர் நடவடிக்கை எடுக்க பி.டி.செல்வகுமார் கோரிக்கை

நாகர்கோவில், ஜூலை.8

தி.மு.க. ஆட்சியில் பத்திரப்பதிவு துறையில் ரூ.10 ஆயிரம் கோடி அளவுக்கு அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. முதல்அமைச்சர் நடவடிக்கை எடுக்க பி.டி.செல்வகுமார் கோரிக்கை விடுத்துள்ளார்.

கலப்பை மக்கள் இயக்க நிறுவன தலைவர் பி.டி. செல்வகுமார் நாகர்கோவிலில் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:

தமிழகத்தில் கிராமப்புற ஊராட்சிகளில் வசிக்கும் ஏழை மக்கள் தங்கள் வசதிக்கேற்ப மனைகளை பிரித்து வாங்கி, வீடு கட்டி வந்தார்கள். ஆனால் கடந்த ஆட்சியில் ஒரு சட்டத்தை கொண்டு வந்ததால் எந்த ஒரு சொத்துக்களையும் தனது வாரிசுகளுக்கு பிரிக்க முடியாமல் மக்கள் அவதிப்படுகிறார்கள்.

மேலும் நில அளவு செய்பவர்கள், எழுத்தர்கள், புரோக்கர்கள் போன்ற பலர் வேலை இழந்து நிற்கின்றனர். இதனால் கட்டுமான தொழிலும், தொழிலாளர்களும் வேலை இழந்து கேரளா, கர்நாடகா, ஆந்திரா போன்ற அண்டை மாநிலங்களுக்கு செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

இங்கு பத்திரப்பதிவு நடப்பதில் பிரச்சினை இருப்பதால் தமிழக அரசுக்கு பத்திரப்பதிவு மூலம் கிடைக்கும் வருவாய் தடுக்கப்பட்டுள்ளது.

கடந்த தி.மு.க. ஆட்சியில் பத்திரப்பதிவு துறையில் ரூ.10 ஆயிரம் கோடி அளவுக்கு அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. இப்பிரச்சினைக்கு தமிழக அமைச்சர்கள், எம்.பி., எம். எல்.ஏக்கள் மற்றும் சமூக நல அமைப்புகள் குரல் கொடுக்க வேண்டும். அது மட்டுமின்றி இந்த பிரச்சினையில் சார்பதிவாளர்கள், இடைத்தரகர்கள் பணம் வாங்குவதையும் தடுக்க வேண்டும். எம்.ஜி.ஆர். முதல்அமைச்சராக இருந்தபோது கேரளத்துடன் இருந்து பிரிந்து வந்த கன்னியாகுமரி மாவட்டத்துக்கு பத்திரப்பதிவுகள் செய்ய நிபந்தனைகள் விதிக்க கூடாது என்று அரசாணை விடுத்திருந்தார். ஆனால் இன்று சொத்துக்களை விற்க முடியாமல், வாங்க முடியாமலும், பாதைகள் போடமுடியாமலும் மக்கள் வேதனையை அனுபவித்து வருகின்றனர். அரசின் வருவாயில் பெரும் பங்கு வகிக்கும் பத்திரப்பதிவு துறையில் நீண்ட காலமாக இருந்து வரும் பிரச்சினையில் முதல்அமைச்சர் தலையிட்டு ஏழை, எளிய மக்கள் சொத்துகளை வாங்கி விற்கும் நடைமுறையை எளிமைப்படுத்தவும், இதன் மூலம் தமிழக அரசுக்கு வருமானம் பெருகவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

### கார்கில் முதல் குமரி வரை

# 4 ஆயிரம் கி.மீ தூரத்தை 67 நாளில் கடந்த இந்தூர் கல்லூரி மாணவர்




கன்னியாகுமரி,ஜூலை.8

விளையாட்டு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கார்கில் முதல் கன்னியாகுமரி வரை சுமார் 4 ஆயிரத்து 200 கி.மீட்டர் தூரத்தை 67 நாளில் கடந்து கல்லூரி மாணவர் சாதனை படைத்தார்.

இந்தூரை சேர்ந்தவர் கார்த்திக் ஜோஷி(வயது24) பயோ மெக்கானிக் இன்ஜினியரிங் பாட பிரிவில் முதலாண்டு கல்லூரியில் சேர்ந்துள்ளார். இந்தியாவில் வளர்ந்து வரும் அல்ட்ரா எண்டூரன்ஸ் விளையாட்டு வீரரான இவர் கார்கிலில் இருந்து நீண்ட தூர ஓட்டத்தை தொடங்கினார். பல்வேறு மாநிலங்கள் வழியாக சுமார் 4 ஆயிரத்து 200 கி.மீட்டர் தூரத்தை கடந்து நேற்று பிற்பகல் 3 மணியளவில் கன்னியாகுமரியில் தனது ஓட்டத்தை நிறைவு செய்தார்.

பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:

கடந்த மே 2 ம் தேதி ஒட்டத்தைதுவங்கி ஜம்மு காஷ்மீர், பஞ்சாப் ஹரியானா டெல்லி,ராஜஸ்தான், மத்திய பிரதேசம், கர்நாடகா, தமிழ்நாடு ஆகிய 7 மாநிலங்கள் வழியாக 4 ஆயிரத்து 200 கி.மீட்டர் தூரத்தை கடந்துள்ளேன், உலகின் மிக பிரபலமான தென்ஆப்பிரிக்காஹாம்ரேட்ஸ் மாரத்தான் போட்டியில் பங்கேற்றுள்ளேன். சேலம் முதல் கன்னியாகுமரி வரை எந்த ஒய்வும் இல்லாமல் 414 கி. மீட்டர் தூரத்தை 72, மணிநேரத்தில் கடந்தேன். ஜம்முவில் மைனஸ் டிகிரி காலநிலையையும் ராஜஸ்தானில் 45 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையையும் சந்தித்தேன். இன்றைய இளைஞர்கள் முயற்சி செய்ய வேண்டும்.பின்வாங்க கூடாது. போதை பழக்கத்தில் இருந்து இளைஞர்கள் விடுபட வேண்டும். அடுத்த இரண்டு ஆண்டில் இலங்கை முழுவதும் ஓடுகிறேன். பின்னர் இலங்கையில் இருந்து நீச்சல் மூலம் இந்தியா வந்தடைந்து, பின்னர் இந்தியா முழுவதும் ஓடுவதற்கு திட்டமிட்டுள்ளேன். இவ்வாறு அவர் கூறினார்.

# 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர் சங்கத்தின் சார்பாக தொழிற்சங்க கூட்டம்



கிருஷ்ணகிரி, ஜூலை 8

கிருஷ்ணகிரி தமிழக வெற்றி கழக அலுவலகத்தின் அருகில் உள்ள டான்சியில் நடைபெற்றது. தொழிலாளர்களுக்கு மாதந்தோறும் ஒன்றாம் தேதி வழங்க வேண்டிய சம்பளம் மற்றும் அரசு ஏற்கனவே வழங்கிய 16 சதவீத ஊதிய உயர்வு உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பாயம் எட்டு மணி நேர வேலை தங்குமிட வசதி கழிப்பிட வசதி வேலை இழந்த தொழிலாளருக்கு மீண்டும் அதே நிலையானைபடி பிழைப்பு ஊதியத்துடன் வேலைபோன்றவைதீர்மானங்கள்நிறைவேற்றப்பட்டு ஒன்றாம் தேதி வழங்க வேண்டிய சம்பளம் ஆறாம் தேதி ஆகிய வரை விளங்காத நிர்வாகத்தை கண்டித்து கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தொடர் போராட்டம் எடுப்பதாக தொழிற்சங்கத்தின் சார்பாக மண்டல செயலாளர் சாந்தகுமார் மாவட்ட தலைவர் முத்துக்குமார் மாவட்டச் செயலாளர்செந்தில்நாதன்கூட்டத்தில்கலந்துகொண்டு உரையாற்றினார் மாவட்டத்தின் வரவு செலவு கணக்குகளை மாவட்ட பொருளாளர் ஜெயவேல் கூட்டத்தில் சமர்ப்பித்தார் மேலும் மேலும் பல தொழிலாளர்கள் கலந்து கொண்டு தொழிற்சங்கத்திற்கு போராட்டம் எடுப்பதாக ஆதரவு தெரிவித்து கூட்டம் நிறைவு செய்தார்கள்.

# அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் மாணவர் சேர்க்கை: கலெக்டர் தகவல்

நாகர்கோவில், ஜூலை.8

கன்னியாகுமரி மாவட்ட கலெக்டர் பிரதாப் வெளியிட்டுள்ளகலெக்டர்அலுவலகசெய்திகுறிப்பில் கூறி இருப்பதாவது:

அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் 2026 ஆம் ஆண்டுக்கான நேரடி மாணவர் சேர்க்கை மூலம் சேர்க்கை பெற கால அவகாசம் 31072026 வரை நீடிக்கப்பட்டுள்ளது. தொழிற்பயிற்சி நிலையங்களில் சேருவதற்கு வயது வரம்பு ஆண்களுக்கு 14 முதல் 40 வயது வரை ஆகும். பெண்களுக்கு உச்ச வயது வரம்பு இல்லை.

ஐ.டி.ஐயில் பல்வேறு பொறியியல் மற்றும் பொறியியல் அல்லாத தொழிற் பிரிவுகளில் சேர்ந்து பயிற்சி பெற 8ம் வகுப்பு தேர்ச்சி, 10ம் வகுப்பு தேர்ச்சி மற்றும் 11 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு, டிப்ளமோ / பட்டப் படிப்பு தேர்ச்சி / தோல்வி மற்றும் இடைநின்றோர் அனைவரும் விண்ணப்பிக்கலாம்.

அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், கோணம், நாகர்கோவிலில்தொழில்4.0திட்டத்தின்கீழ்அதிநவீன தொழில் நுட்ப புதிய தொழிற்பிரிவுகள் அட்வான்ஸ்டு சி என் சி மெஷினிஸ் டெக்னீஷியன், இன்டஸ்ரியல் ரோபோட்டிக்ஸ் மற்றும் டிஜிட்டல் மேனுபேக்சரிங், மற்றும் மெக்கானிக் எலக்ட்ரானிக் வெகிக்கிள் ஆகிய மூன்று தொழிற்பிரிவுகள் துவங்கப்பட்டு பயிற்சி நடைபெற்று வருகிறது. மேலும் காது கேளாதோர் மற்றும் வாய்பேசாதவருக்காக சிறப்பு தொழிற்பிரிவு உள்ளது.

அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் சேரும் மாணவர்களுக்கு கட்டணமின்றி பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அரசு மற்றும் அரசு உதவி பெறும் தொழிற்பயிற்சி நிலையங்களில் சேரும் மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை மாதம் ரூ.750/, பேருந்து கட்டண சலுகை, மிதிவண்டி, பாடப்புத்தகங்கள் மற்றும் வரைபடக்கருவிகள், 2 செட் சீருடைகள் மற்றும் 1 செட் காலணிகள் போன்ற சலுகைகள் அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் புதுமைப்பெண் மற்றும் தமிழ் புதல்வன் திட்டத்தின் கீழ் அரசு பள்ளிகளில் 6 முதல் 10 அல்லது 12 ஆம் வகுப்பு வரை தமிழ் மற்றும் ஆங்கில வழியில் பயின்ற மாணவ/மாணவிகளுக்கும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 6 முதல் 10 அல்லது 12 ஆம் வகுப்பு வரை தமிழ் வழியில் பயின்ற மாணவ/மாணவிகளுக்கும் மாதம் ரூ.1000/ கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

சேர்க்கை தொடர்பான மேலும் விவரங்களுக்கு அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், கோணம், நாகர்கோவிலில் முதல்வரை நேரில் அணுகவும். 04652 261463, 9499055806, 9499055805. அரசு, தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் அதிக அளவில் வேலைவாய்ப்புகள் உள்ளதால் அனைவரும் அரசு ஐடிஐ ல் சேர்ந்து பயன்பெற மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் தெரிவித்துள்ளார்.



ஈரோடு மாவட்டம், பேரோடு ஊராட்சியில் மகளிர் சுய உதவிக்குழுவின் மூலம் கடனுதவி பெற்று சோலார் டிரையர் அமைத்து மதிப்பூட்டப்பட்ட செக்கு எண்ணெய் தயாரிப்பு பணிகள் செய்து வரும் முத்தாயம்மாள், நீலா லட்சுமி, அன்னை மகளிர் சுய உதவிக்குழுவினர்களின் தயாரிப்பு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.



# தமிழக வெற்றி கழகம் ஒன்றியச் செயலாளர் மருத்துவ உதவி

கன்னியாகுமரி, ஜூலை 8,

அகஸ்தீஸ்வரம் ஒன்றிய செயலாளர் எட்வின் அவர்களிடம் மறவன்குடியிருப்பு ஊரைசார்ந்த பி.காம் முதலாம் ஆண்டு படிக்கும் கல்லூரி மாணவி துர்கா தேவிக்கு சிறுநீரகம் பாதிக்கப்பட்டு இருப்பதாக அவருக்கு மருத்துவ செலவு மற்றும் மருத்துவ உதவி தேவை என கேட்டுள்ளார் அதன்படி நேற்று வழுக்கம் பாறை சகாய மாதா ஆலயத்தில் வைத்து ஒன்றிய செயலாளர் எட்வின் அகஸ்தீஸ்வரம் ஒன்றிய எட்வின் ஏற்பாட்டில் 50,000 ரூபாய் மருத்துவ செலவிற்கு தமிழக வெற்றி கழகத்தினர் சார்பாக. வழங்கப்பட்டது.

## கன்னியாகுமரி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில்

# 10ம் வகுப்பு தேர்ச்சிபெறாதவர் மற்றும் அதற்கு மேலும் உள்ள கல்வித்தகுதி 5 ஆண்டுகள் முடிவடைந்து புதுப்பித்த பதிவுதாரர்களுக்கு உதவித்தொகை

நாகர்கோவில், ஜூலை. 8

கன்னியாகுமரி மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் 10ம் வகுப்பு தேர்ச்சிபெறாதவர் மற்றும் அதற்கு மேலும் உள்ள கல்வித்தகுதியை பதிவு செய்து 5 ஆண்டுகள் முடிவடைந்து தொடர்ந்து புதுப்பித்தல் செய்துவரும் பதிவுதாரர்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. தற்போது 01.07.2026 முதல் 30.09.2026ம் தேதி வரையிலான காலத்திற்கு உதவித் தொகை வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த உதவியை பெற வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவுசெய்து 30.06.2026 தேதியில் 5 ஆண்டுகள் நிறைவு செய்திருத்தல் வேண்டும். 30.09.2026 அன்று உச்சவயது ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு 45 வயதுக்குள்ளும் மற்ற அனைத்து பிரிவினர்களுக்கு 40 வயதுக்குள்ளும் முடிவடையாமல் இருக்க வேண்டும். உதவித்தொகை பெறுவதற்கு குடும்பஆண்டு வருமானம் 72,000/ ரூபாய்க்கு மிகைப்படாமல் இருத்தல் வேண்டும். மாற்றுத்திறனாளிகளைப் பொறுத்தவரைபதிவுசெய்து30.06.2026 தேதியில் ஒருவருடம் முடிவுற்றிருந்தால் போதுமானது. மேலும் மாற்றுத்திறனாளி பதிவுதாரர்களுக்கு வயதுவரம்பு மற்றும் வருமான உச்சவரம்பு ஏதுமில்லை.

பொதுப்பிரிவு பதிவுதாரர்களைப் பொறுத்தவரை பள்ளியிறுதி வகுப்பு தேர்ச்சி பெறாதவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.200/ம், பள்ளியிறுதி வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு

ரூ.300/ம், ப்ளஸ்2 தேர்ச்சிக்கு ரூ.400/ம், பட்டதாரிகளுக்கு ரூ.600/ம் மற்றும் மாற்றுத்திறனாளிகளை பொறுத்தவரை பள்ளியிறுதி வகுப்பிற்கு கீழ் மற்றும் பள்ளியிறுதி வகுப்பு தேர்ச்சிக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.600/ம் , ப்ளஸ் 2 தேர்ச்சிக்கு ரூ.750/ம், பட்டதாரிகளுக்கு ரூ.1000/ம் தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகிறது என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது.

இந்த உதவித்தொகையினை பெற மனுதாரர் பள்ளி அல்லது கல்லூரிப் படிப்பை தமிழகத்திலேயே முடித்து இங்கேயே 15 ஆண்டுகள் வசிப்பவராக இருக்க வேண்டும். அரசிடமிருந்து வேறு எந்தவகையிலும் எந்தவிதமான உதவித்தொகையும் பெறுவராக இருத்தல்கூடாது. தனியார் நிறுவனங்களில் பணிபுரிந்து தொழிலாளர் பொது வருங் கால நிதி ஈட்டுறுதி அலுவலகத்தில் கணக்குஎண் பெற்றவராக இருத்தல் கூடாது. மனுதாரர் முற்றிலுமாக வேலையில்லாதவராகவே இருக்க வேண்டும். பள்ளிக்கல்வி/கல்லூரிக் கல்வி மற்றும் தொழில்சார்ந்த கல்வி நிறுவனங்களுக்கு தினமும் சென்று படிக்கும் மாணவ மாணவியராக இருக்கக்கூடாது. ஆனால் தொலைதூரக் கல்வி மற்றும் அஞ்சல்வழிக்கல்வி கற்கும் மனுதாரர்கள் விண்ணப்பம் செய்யலாம்.

பொறியியல், மருத்துவம், கால்நடை மருத்துவம், விவசாயம், சட்டம் போன்ற தொழிற் பட்டப்படிப்புகள் படித்த பதிவுதாரர்களுக்கும் வேலைவாய்ப்பற்றோர் நிவாரணம் பெற இயலாது.

வேலைவாய்ப்பற்றோருக்கான உதவித்தொகை வாங்கினால் வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து தங்களது பரிந்துரைவாய்ப்பு பறிபோகுமோ என பதிவுதாரர்கள் அச்சப்படத் தேவயில்லை. உதவித்தொகை வழங்கப்படும் காலத்திலும் பதிவுதாரர்களது கல்வித்தகுதி, வயது மற்றும் பதிவுமூப்புக்குட்பட்டு அறிவிக்கப்படும் காலியிடங்களுக்கு தொடர்ந்து அரசின் விதிமுறைப்படி பரிந்துரைக்கு பரிசீலி7க்கப்படும். எனவே, மேற்கூறிய தகுதி மற்றும் விருப்பமுடைய பதிவுதாரர்கள் தங்களது அசல் கல்விச்சான்றிதழ், மாற்றுக்கல்விச் சான்றிதழ் மற்றும் வேலைவாய்ப்பு அலுவலக பதிவு அடையாள அட்டையுடன் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் அலுவலக வேலைநாட்களில் நேரில் வருகைதந்து உதவித்தொகைக்கான விண்ணப்பபடிவம் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் தெரிவித்துள்ளார்.

# அண்ணாமலை விரைவில் கட்சி கொடி, சின்னம் அறிவிப்பார், உள்ளாட்சி தேர்தல் நடந்தால் கண்டிப்பாக போட்டியிடுவோம்

## வி தி லீடர் இயக்க நிர்வாகிகள் மதுரையில் பேட்டி



மதுரை ஜூலை:8

தமிழகத்தில் அடுத்து போட்டி தவெகக்கும் அண்ணாமலைக்கும்தான் போட்டி இருக்கும்ம துரை அலங்காநல்லூரில் அண்ணாமலையின் we the leaders இயக்கம் சார்பில் சோழவந்தான் தொகுதி நிர்வாகிகள் கலந்து கொண்ட ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இதில் முக்கிய தீர்மானமாக சோழவந்தான் தொகுதி சார்பில் போதைப்பொருள் பயன்பாட்டுக்கு எதிராக பொது மக்கள் தொண்டர்கள் இணைந்து மாபெறும் பேரணி நடத்துவது எனவும் பேரணியை அண்ணாமலை கலந்து கொண்டு தொடங்கி வைக்க உள்ளார். மேலும் செய்தியாளர்களை சந்தித்த நிர்வாகிகள் பேசியதாவது:

we The Leaders சார்பில் தொண்டர்கள், நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் இன்று நடைபெற்றது. இதில் தொகுதி சார்பில் போதைப்பொருளுக்கு எதிராக மாபெறும் பேரணி நடத்த உள்ளதாகவும் , அதில் அண்ணாமலை கலந்து கொண்டு தொடங்கி வைக்க உள்ளதாகவும், இயக்கம் விரைவில் 1 கோடி உறுப்பினர்களை சேர்த்து மாபெரும் பெரிய இயக்கமாக மாறும், விரைவில் இந்த இயக்கம் கட்சியாக தமிழகத்தில் உருவெடுக்கும், கட்சி சின்னம், கொடி தயாரிக்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. தமிழகத்தில் அண்ணாமலை கட்சி ஆரம்பித்தவுடன் தமிழக அரசியல் சூடு பிடிக்கும்,

தவெக வுக்கும் அண்ணாமலைக்கும் தான்தமிழகத்தில் போட்டியே இருக்கும், மற்ற கட்சிகள் சிதறி சின்னாபின்னமாகிவிடும், தவெக அரசு 6 மாதத்தில் உள்ளாட்சி தேர்தலை நடத்தினால் நாங்கள் போட்டியிடுவது குறித்து யோசிப்போம் உள்ளாட்சி தேர்தல் தள்ளிப் போனால் கண்டிப்பாக உள்ளாட்சி தேர்தலில் போட்டியிட்டு பல இடங்களில் வெற்றி பெற்று பல்வேறு பதவிகள், பெறுவோம், அண்ணாமலை கட்சி பிரவேசம் நிச்சயம் தவெகவுக்கு பின்னடைவை ஏற்படுத்திதமிழகமக்கள்அண்ணாமலைக்கு முழு ஆதரவு தருவார்கள் என பேசினார்



மதுரைமாவட்டஆட்சித்தலைவர்நிஷாந்த்கிருஷ்ணாமதுரைமாவட்டம், உசிலம்பட்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் அலுவலக செயல்பாடுகள் மற்றும் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். மேலும் அலுவலகத்தில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் வருவாய் தொடர்பான சேவைகள், மனுக்கள் மீதான நடவடிக்கைகள், பட்டா மாற்றம், முதியோர் உதவித்தொகை, சமூக பாதுகாப்புத் திட்டங்கள், வருமானம், இருப்பிடம், சாதிச் சான்றிதழ்கள் உள்ளிட்ட பல்வேறு சான்றிதழ்கள் வழங்கும் பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்தார். உசிலம்பட்டி சார் ஆட்சியர் உட்கர்ஸ் குமார் உடன் உள்ளார்.

# ராமநாதபுரம் கிழக்கு மாவட்டம் தொண்டி பேரூர் தமுமுக மமக நிர்வாகிகள் கூட்டம்



ராமநாதபுரம், ஜுலை 08

ராமநாதபுரம் கிழக்கு மாவட்டம் தொண்டி பேரூர் தமுமுக மமக நிர்வாகிகள் கூட்டம் பேரூர்தலைவர்காதர்தலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளர்களாக தமுமுகமாநிலசெயலாளர்தொண்டி சாதிக் பாட்சா மாவட்ட தலைவர் வழக்கறிஞர் ஜிஃப்ரி மமக மாவட்ட துனை செயலாளர் கவுன்சிலர் பெரியசாமி ஆகியோர் கலந்து கொண்டனர். தமுமுக செயலாளர் மைதீன் கிராத் ஓதி நிகழ்வை துவங்கி வைத்தார்.

மமக செயலாளர் பரக்கத் அலி பொருளாளர் ஹம்மாது துனை தலைவர் அலாவுதின் ரிஸ்வான் ஐபிபி அன்சாரி சலிம் ரியாஸ் அப்துல்லா ஜலால் முஸ்தபா யாசிர் இபுராம்ஷா மாணவர் அணி நவ்பிக் மற்றும் தமுமுக மமக தொண்டி பேரூர் நிர்வாகிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர் தொண்டி பேரூராட்சியில் இந்து முஸ்லிம் ஒற்றுமையை பலப்படுத்தும் வகையில் சமூக நல்லிணக்கம் தொடர்ந்து கடை பிடிக்க தொண்டியில் ஐக்கிய ஜமாத் இந்து மத தர்ம பரிபாலன சபை தொடர்ந்து நல்லிணக்கம் தொடர பல்வேறு முயற்சியின் அடிப்படையில் தொண்டி பேரூராட்சி தலைவர் தேர்தலில் ஊர் பொது வேட்பாளரை ஆதரித்து வந்துள்ளது வருகின்ற உள்ளாட்சி தேர்தலில் தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம் மனிதநேய மக்கள் கட்சி அனைத்து சமூக மக்களின் நல்லிணக்கம் பேணுவதற்காக தொப்புள் கொடி உறவுகள் வெற்றிக்கு உறுதுணையாக இருப்பது எனவும் எஞ்சிய வார்டு களில் தமுமுக மமக பங்கேற்கும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது தொண்டியை மையமாக கொண்டு தனி தாலுகா அமைக்க வேண்டும் எஸ் பி பட்டினம் முதல் காரங்காடு வரை கடற்கரை கிராமமாகும் மீனவர்கள் விவசாயிகள் அனைத்து சமூக மக்கள் வாழக்கூடிய பகுதி மக்களுடைய நலன் கருதி தொண்டியை தலைமையாக வைத்து தனித் தாலுகா அமைக்க வேண்டும் தொண்டி செய்யது முகம்மது .அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியை சுற்றி சுற்று சுவர் அமைக்க வேண்டும்★ உள்ளிட்ட பல்வேறு முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. தொண்டி பேரூர் அனைத்து வார்டு நிர்வாகிகளும் கலந்து கொண்டனர். மமக செயலாளர் பரகத் அலி நன்றி கூறினார்.

# ஓய்வு வயது 60 ஆக உயர்த்த வேண்டும் என பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழக அரசின் கவனத்தை ஆர்ப்பாட்டம்



மதுரை, ஜூலை 8

மதுரைமாவட்டஆட்சியர் அலுவலகம் அருகே டாஸ்மாக் தொழிற்சங்கங்களின் போராட்ட நடவடிக்கை குழு மதுரை மண்டலம் சார்பாக டாஸ்மாக் நிறுவனத்தில் 24 ஆண்டுகளாக குறைந்த தொகுப்பூதியத்தில் பணியாற்றி வரும் பணியாளர்களுக்கு பணி நிரந்தரம் அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம் பணி பாதுகாப்பு இஎஸ்ஐ திட்டம் காலி பாட்டில் தனி முகமை மூலம் சேகரித்தல் ஓய்வூதியம் ஓய்வு வயது 60 ஆக உயர்த்த வேண்டும் என ப

ல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழகஅரசின்கவனத்தைஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் மாநில பொதுச் செயலாளர்LLF முத்துப்பாண்டி தலைமை வகித்தார் மாநில இணை பொதுச் செயலாளர்TNGTEU மரகதலிங்கம் வரவேற்புரை ஆற்றினார் மாநில துணைத்தலைவர் ராமர்TNTSNA மாநில செயலாளர் அழகுமலைAICCTU முன்னிலை வகித்தனர் தொடர்ந்து நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாநில தலைவர்கள் கனகராஜ்SPF அரியகுமார்TNTMPNS மாநில செயலாளர் பாண்டியன்IATP மாநில பொதுச் செயலாளர் ஆறுமுகம்TN SC/ST EWA 58/1976 மாநில பொதுச் செயலாளர் மோசிலின்பியர்சன்NTTU மாநில பொருளாளர் ரவிSPF உட்பட டாஸ்மாக் தங்கநிர்வாகிகள்ஊழியர்கள்பலர்கலந்து

# எஸ் டி பி ஐ வடக்கு மாவட்ட சிறப்பு செயற்குழு கூட்டம் நடைபெற்றது..




திருப்பூர் ஜூலை:08

இந்த சிறப்பு செயற்குழு கூட்டத்தில் இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது

வருகின்ற உள்ளாட்சி தேர்தலில் திருப்பூர் மாநகராட்சியில் பெரும்பான்மையான வார்டுகளில், திருப்பூர் மாவட்டத்திற்கு உட்பட்ட ஊராட்சி பகுதிகளில் 50 சதவீதம் போட்டியிடுவது எனஎஸ்டிபிஐ கட்சியின் சார்பில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன வடக்கு மாவட்ட செயற்குழு மாவட்ட தலைவர் பஷீர் அகமது தலைமையில் பொதுச்செயலாளர் அப்துல் வஹாப் வரவேற்புரை நிகழ்த்தினார் மாநில செயற்குழு உறுப்பினரும் திருப்பூர் மண்டல தலைவருமான ராஜா உசேன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார் மாவட்ட பொருளாளர் ஜாபீர் அகமது, முன்னிலை வகித்தார் தெற்கு தொகுதி தலைவர் அன்வர் பாஷா, வடக்கு தொகுதி முகமது யாசின், தெற்கு தொகுதி செயலாளர் ஷேக் அலாவுதீன், இறுதியில்மாவட்ட செயற்குழு உறுப்பினர் திப்பு சுல்தான் நன்றி உரையாற்றினார்..

# மாற்றுத்திறனாளிகள் சிறப்பு குறைதீர் கூட்டம் செயற்கை கால் வழங்கிய கலெக்டர்



நாகர்கோவில், ஜூலை.8

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் தலைமையில், மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நேற்று நடைபெற்றது. கூட்டத்தில், பொது மக்களிடமிருந்து கல்வி உதவித்தொகை, பட்டா பெயர் மாற்றம், மாற்றுத்திறனாளி நல உதவித் தொகை, முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, குடிநீர் வசதி, சாலை வசதி உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் கோரி 525 கோரிக்கை மனுக்கள் இன்று பெறப்பட்டது. பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட அனைத்து கோரிக்கை மனுக்கள் மீது விரைந்து தீர்வு காணுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் துறைசார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

அதனைத்தொடரந்து மாற்றுத்திறனாளிகளின் கோரிக்கைகளுக்கு எளிதில் தீர்வு காணும் நோக்கில் ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை மாற்றுத்திறனாளிகள் சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வைத்து நடைபெற்று வருகிறது. இக்கூட்டத்தில் மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு செயற்கை கால் கோரி வரப்பெற்ற மனு மீது நடவடிக்கை மேற்கொண்டு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின் கீழ் 7 பயனாளிகளுக்கு ரூ.2,79,000 மதிப்பில் செயற்கை கால் மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்.

நடைபெற்ற கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் அ.பூங்கோதை, நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் எஸ். காளீஸ்வரி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் தினேஷ் சந்திரன், துணை காவல் கண்காணிப்பாளர் பிச்சையா, துறை அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



திருப்பூர் ஜூலை 08

திங்கள் கிழமைகளில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டுஅவைஅனைத்தும் தொடர்புடைய துறை அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு உரிய தீர்வு காணப்பட்டு வருகிறது.

அந்த வகையில், இன்றைய தினம் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து வீட்டுமனை பட்டா மற்றும் முதியோர் உதவித்தொகை, புதிய குடும்ப அட்டை வேண்டியும், சாலை வசதி, குடிநீர் வசதி வேண்டியும் என பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக 696 மனுக்களை பெற்றுக் கொண்டதுடன் மனுதாரர்கள் முன்னிலையிலேயே விசாரனை செய்து அதன் மீது உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் மனிஷ் நாரணவரே அறிவுறுத்தினார்கள்

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் (பொது) து.சு.துரைமுருகன், (தேர்தல்) கண்ணன், வருவாய் கோட்டாட்சியர்கள் (திருப்பூர்) சிவபிரகாஷ், (தாராபுரம்) ஃபெலிக்ஸ் ராஜா, (உடுமலைப் பேட்டை) குமார், உதவி இயக்குநர் (கலால்) பாலமுருகன், தனிதுணை ஆட்சியர் (சமூகபாதுகாப்புத்திட்டம்) பத்மபிரியா, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்சதீஸ்மற்றும்அனைத்துஅரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



சேலம், ஜூலை 8

சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. நேற்றைய தினம் நடைபெற்ற பொது மக்கள் குறை தீர்க்கும் கூட்டத்தில் முதியோர் உதவித் தொகை, இலவசவீட்டுமனைபட்டா, பட்டா மாறுதல், சாதி சான்று, வேலைவாய்ப்பு, வங்கி கடன்கள், கல்வி உதவித்தொகை, திருமண நிதி உதவி, மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை, அவர்களுக்கான உதவி உபகரணங்கள், குடிநீர் வசதி, சாலை வசதி உட்பட அடிப்படை வசதிகள் மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 448 மனுக்கள் வந்தன. மாற்றுத்திறனாளிகள் சிரமம் இல்லாமல் மனுக்களை வழங்கும் வகையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் தரை தளத்தில் அவர்களுக்கான குறைதீர் கூட்டம் நடத்தப்பட்டது. அந்த வகையில் 34 மனுக்களை பெற்று உரிய நடவடிக்கையை மேற்கொள்ள தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இதை தொடர்ந்து மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 4 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ 1900/= மதிப்பில் ரூ 7600/= மதிப்பில் ஊன்றுகோல்களை மாவட்ட ஆட்சித் தலைவர் இளம்பகவத் வழங்கினார்.

# 10 ஆம் வகுப்பு 12ஆம் வகுப்பு வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்கு பரிசளிப்பு விழா



வேலூர், ஜூலை 08

குடியாத்தம் செருவங்கி அண்ணா நகர் பவன் உள் விளையாட்டு அரங்கத்தில்பாபாசாகேப் டாக்டர்B.R. அம்பேத்கர் கல்வி அறக்கட்டளை சார்பில் 10 ஆம் வகுப்பு 12ஆம் வகுப்பு வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்கு பரிசளிப்பு விழா நடைபெற்றது.

கல்விஅறக்கட்டளைதலைவர்இரா. பாஸ்கர் தலைமை தாங்கினார். இரா. முத்துக்குமார் வரவேற்புரை ஆற்றினார். கருத்தியல் தலைவர்கள் புலவர் சுப்ரமணி ஆசிரியர்கள் ஏகாம்பரம் சம்பத் கண்ணன் கோடீஸ்வரன் முன்னிலை வகித்தனர். இந்திய குடியரசு கட்சி வேலூர் மண்டல செயலாளர் இராசி. தலித் குமார் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார். வழக்கறிஞர் பாலகுமரன் செந்தமிழ் சரவணன் வாழ்த்துரை வழங்குகினர்.விழா ஏற்பாடுகளை அரசு போக்குவரத்து கழக தயாளன் நீதித்துறை ராஜா ஏற்பாடு செய்தார்கள். உடன்பாபாசாகேப் டாக்டர்.B.R. அம்பேத்கர் கல்வி அறக்கட்டளை உறுப்பினர்கள் குப்புசாமி அமிர்தலிங்கம் ஜம்புநாதன் முருகன் மற்றும் பலர் கலந்து கொண்டனர் முடிவில் பொருளாளர் பேங்க் மேலாளர் ஓய்வு சிவமணி நன்றி கூறினார்.

# பழவூர் அரசு கிளை நூலகத்தில் புரவலராக இணைந்த மணமக்கள்

தென்தாமரைகுளம்., ஜூலை 8

பழவூர்நூலகவாசகர்ஐயப்பன்முத்துசுகந்திஆகியோரின் திருமணம் நேற்று நடைபெற்றது.மணமக்கள் பழவூர் கிளை நூலக நல்நூலகர் திருக்குமரனிடம் ரூபாய் 1000 வழங்கி நூலக புரவலராக இணைந்தனர்.நிகழ்வில் நூலக அறம் வாசகர் வட்ட தலைவர் மாதவதாஸ், ஆலோசகர்கள் வேல்முருகன்,கபிலன், துணைச் செயலாளர் கபிலா, செயற்குழு உறுப்பினர் சிதம்பரகண்ணன் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துக்களை தெரிவித்தனர். புரவலராக இணைந்த மணமக்களுக்கு மாவட்ட நூலக அலுவலர் கணேசன்,கண்காணிப்பாளர் மற்றும் மாவட்ட நூலக அலுவலக பணியாளர்கள் சார்பாக பழவூர் கிளை நூலக நூலகர், அறம் வாசகர் வட்ட நிர்வாகிகள் நன்றிகளையும், பாராட்டுகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டனர்.

# இரணியல் அருகே முதியவர் சாவு

இரணி, ஜூலை 8

இரணியல் அருகே மேல் கருப்பு கோடு என்ற இடத்தை சேர்ந்தவர் திரவியம் பிள்ளை (68) வாழை விவசாயம் செய்து வந்தார் இவரது மனைவி கிருஷ்ணமணி கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு இறந்து விட்டார் இவருக்கு மூன்று குழந்தைகள் உள்ளனர் கடந்த சில ஆண்டுகளாக திரவியம் பிள்ளை சோரியாஸிஸ் நோய் பாதிப்புக்கு உள்ளாகி அவதிப்பட்டு வந்ததாக கூறப்படுகிறது நேற்று மதியம் வீட்டிற்கு வெளியே வாயில் நுரை பொங்க மயங்கி கிடந்ததாக தெரிகிறது அக்கம் பக்கம் நின்றவர்கள் உறவினர்கள் நண்பர்கள் மீட்டு ஆசாரி பள்ளம் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார் மருத்துவர்கள் தீவிர சிகிச்சை அளித்தும் பலனின்றி நேற்று இரவு பரிதாபமாக உயிரிழந்தார் இது குறித்து அவர் மகன் சபரீஷ் அளித்த புகாரில் பேரில் இரணியல் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் முத்து கிருஷ்ணன் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்

# நிலுவையில் உள்ள பணிகளை விரைந்து முடிக்க வேண்டும்: கலெக்டர் உத்தரவு

ஈரோடு ஜூலை 8

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் ஈரோடு மாவட்ட வளர்ச்சி திட்டப்பணிகள் தொடர்பாக அனைத்துத்துறை அலுவலர்களுடனான மாவட்ட உயர்மட்ட குழுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் பேசிய, மாவட்ட ஆட்சித்தலைவர் ஈரோடு மாவட்டத்தில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு துறைகளின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும்திட்டப்பணிகள்குறித்து ஆய்வுமேற்கொண்டார். அதன்படி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் மலைக் கிராமங்களுக்கு சாலைகள் அமைப்பது தொடர்பாகவும் சாலைப் பணிகள் குறித்து இணையதளத்தில் பதிவேற்றம் செய்தல் தொடர்பாகவும், தொழிலாளர் நலத்துறையின் சார்பில் பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு வீட்டுவசதி திட்டம் உள்ளிட்ட திட்டங்கள் தொடர்பாகவும், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பில், ஊராட்சிகளில் மின் கட்டண நிலுவையை குறைக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல் தொடர்பாகவும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் சார்பில் பட்டா பெயர் மாற்றம் செய்ய கோருவது தொடர்பாகவும், சுகாதாரத்துறையின் சார்பில் பிறப்பு, இறப்பு பதிவில் பெற்றோரின் ஆதார் விபரங்களை மென்பொருளில் பதிவு செய்து இணைப்பது தொடர்பாகவும், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறையின் சார்பில், நடைபாதை அமைத்தும், வனவிலங்குகளில் இருந்து பாதுகாப்பாக இருப்பதற்கு மதில் சுவரும் அமைத்து தருதல் தொடர்பாகவும். பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் கழிவுநீர் வடிகால் அமைத்துத் தரக் கோருதல் தொடர்பாகவும், பெண்தன்னார்வலர்பணியிடங்களை நிரப்புதல் தொடர்பாகவும், மின்சாரத் துறையின் சார்பில், புதிய மின் மாற்றி அமைக்க இடம் தேர்வு செய்ய வேண்டுதல் தொடர்பாகவும், ஈரோடு விற்பனைக்குழு துறையின் சார்பில் நில உரிமை மாற்றம் செய்தல் தொடர்பாகவும், விரிவாக ஆய்வு மேற்கொண்டார். மேலும், மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை விரைந்து முடித்திடவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார் கூட்டத்தில்மாவட்ட வருவாய் அலுவலர் சாந்த குமார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கிரண் ஸ்ருதி மாவட்ட வன அலுவலர் (ஈரோடு) குமிலி வெங்கட அப்பால நாயுடு திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) திரு. செந்தில்குமார், உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# வீ த லீடர்ஸ் சார்பில் போதைப்பொருளுக்கு எதிரான உறுதி மொழி



ஈரோடு ஜூலை 8

ஈரோடு சூரம்பட்டி பஸ் நிலையம் அருகே வீ த லீடர்ஸ் சார்பில் போதைக்கு எதிரான உறுதி மொழி எடுத்துக் கொள்ளப் பட்டது. அக்னி ராஜேஷ் தலைமையில் நடந்த இந்த நிகழ்ச்சியில் தன்னார்வலர்கள் ரவீந்திரன், அண்ணாதுரை, சின்னதுரை, சின்னசாமி ,ரமேஷ், மாணிக்கம், சக்தி, ஸ்ரீதர் ,கண்ணன், பிருந்தா, சரவணன், ராஜேந்திரன் ஆகியோர் உள்பட பலர்கலந்து கொண்டனர்.

நான் என் வாழ்நாளில் ஒருபோதும் எவ்விதமான போதைப்பொருளையும் எந்த சூழ்நிலையிலும் பயன்படுத்த மாட்டேன் போதையின் பிடியில் இருந்து என் குடும்பத்தையும் சுற்றுப்புறத்தையும் காப்பாற்றுவதற்கு முயற்சி செய்து போதை இல்லாத ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்கப்படுவேன். போதைக்கு எதிரான வலிமையான விழிப்புணர்வை மக்களிடம் கொண்டு சேர்க்க போராடுவன். இவ்வாறு இந்த நிகழ்ச்சியில் உறுதிமொழி எடுத்துக் கொள்ளப்பட்டது.

## சந்தையடியில்

# 11வது எல்.சி.சி.ஏ. குழந்தைகள் மற்றும் திறந்தநிலை செஸ் போட்டி



தென்தாமரைகுளம்., ஜூலை 8

சந்தையாடி ஊர் சமுதாய நலக்கூடத்தில் வைத்து எல்.சி.சி.ஏ லிட்டில் சாம்பியன் செஸ் அகாடமி சார்பில் 11வது எல்.சி.சி.ஏ குழந்தைகள் மற்றும் திறந்த நிலை செஸ் போட்டி நடைபெற்றது இந்த போட்டிகளில் கன்னியாகுமரி, நெல்லை, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களிலிருந்து 80 மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர் இந்த அறிவு சார் திறன் போட்டியில் மாணவ மாணவியர்களை பெற்றோர்கள் ஆர்வத்துடன் அழைத்து வந்திருந்தனர். போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு சந்தையடி ஊர் கலையரங்கத்தில் வைத்து பரிசளிப்பு விழா நடைபெற்றது விழா அகஸ்தீஸ்வரம் பேரூராட்சி முன்னாள்தலைவர் சந்தையடி பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு அகஸ்தீஸ்வரம் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் ராமச்சந்திரன் கலந்து கொண்டு பரிசுகளை வழங்கினார். இந்த செஸ் போட்டியினை ராபின் அவருடன் இணைந்து நிர்வாகிகள் ஏற்பாடு செய்திருந்தனர்.

# திருச்சியில் விண்ணை முட்டிய புகை மூட்டம் ரூ.10 லட்சம் மதிப்பிலான பொருட்கள் சேதம்



திருச்சி, ஜூலை 8

திருச்சி,அரியமங்கலம் எஸ்.ஐ.டி கல்லூரி பின்புறம் உள்ள கணபதி நகர் 4வது தெருவில் சிவக்குமார் என்பவருக்கு சொந்தமான சிவா பிளாஸ்டிக் என்ற பெயரில் பழைய பிளாஸ்டிக் குடோன் செயல்பட்டு வருகிறது.

இந்த பிளாஸ்டிக் குடோனில் மாநகரின் பல்வேறு பகுதிகளில், பல்வேறு நபர்கள் மூலம் சேகரிக்கப்படும் பழைய பிளாஸ்டிக் பொருட்கள் தரம் பிரிக்கப்பட்டு மறுசுழற்சிக்கு அனுப்பப்படுகின்றன. அந்த வகையில் சேகரிக்கப்படும் பழைய பிளாஸ்டிக் பொருட்கள் குடோனுக்கு வெளியே சேகரித்து வைக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில், இன்று அதிகாலை அந்தப் பகுதியில் இருந்து கரும்புகை வெளி வந்ததை அறிந்த அக்கம்பக்கத்தினர் சென்று பார்த்தனர். அப்போது, தரம் பிரித்து வைப்பதற்காகச் சிமெண்ட் தரையில் குவியலாக வைக்கப்பட்டிருந்த பழைய பிளாஸ்டிக் பொருட்கள் தீப்பற்றி எரிந்து கொண்டிருப்பது தெரியவந்தது. காற்றின் வேகம் அதிகமாக இருந்ததால் தீ மளமளவெனப் பரவியதுடன், விண்ணை முட்டும் அளவிற்குப் புகையும் வெளியானது.

இதுகுறித்து உடனடியாகத் தீயணைப்புத் துறையினருக்கும், காவல் துறையினருக்கும் தகவல் தெரிவிக்கப் பட்டது.தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த திருவெறும்பூர் தீயணைப்புத் துறையினர், சுமார் இரண்டு மணி நேரம் தீவிரமாகப் போராடித் தீயை அணைத்துக் கட்டுக்குள் கொண்டு வந்தனர். இந்தத் தீவிபத்தில் சுமார் 10 லட்சம் ரூபாய் மதிப்பிலான பழைய பிளாஸ்டிக் பொருட்கள் எரிந்து சாம்பலாகின. அதிகாலையில் நடந்த இந்தத் தீ விபத்துச் சம்பவத்தில் பிளாஸ்டிக் எரிந்ததால் வெளியான நச்சுப் புகையினால் பொது மக்கள் கடும் அவதிக்குள்ளாகினர். இச்சம்பவம் குறித்து அரியமங்கலம் போலீசார் வழக்குப் பதிவு செய்து, தீவிபத்துக்கான காரணம் குறித்துத் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர். முன்னதாக, அரியமங்கலம் பகுதியில் கஞ்சா மற்றும் போதைப்பொருள் பயன்படுத்துவோர் கணபதி நகர் பின்புறம் வயல் வெளி மற்றும் உய்யக்கொண்டான் ஆற்றுக் கரைகளில் கூடுவதும், அப்பகுதியினரை அச்சுறுத்துவதும் தொடர் கதையாக இருக்கின்றது. அந்தப் பகுதியில் பழைய பிளாஸ்டிக் சேகரிப்பு குடோன்கள் பல இருக்கின்றன. அந்தவகையில், சிவா பிளாஸ்டிக் குடோனில் சேகரித்து தரம் பிரித்து வெளியே வைத்திருந்த பிளாஸ்டிக் கழிவுகளில் யாரோ மர்ம நபர்கள் வைத்த தீயால் அப்பகுதி குடியிருப்புவாசிகள் பெரும் அவதிக்கு உள்ளாகினர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஈரோடு மாவட்ட வளர்ச்சி திட்டப்பணிகள் தொடர்பாக அனைத்துத்துறை அலுவலர்களுடனான மாவட்ட உயர்மட்ட குழுக் கூட்டம்



ஈரோடு, ஜூலை 8

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் ஈரோடு மாவட்ட வளர்ச்சி திட்டப்பணிகள் தொடர்பாக அனைத்துத்துறை அலுவலர்களுடனான மாவட்ட உயர்மட்ட குழுக் கூட்டம் மாவட்டகலெக்டர் ச.கந்தசாமி தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள். ஈரோடு மாவட்டத்தில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு துறைகளின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். அதன்படி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் மலைக் கிராமங்களுக்கு சாலைகள் அமைப்பது தொடர்பாகவும் சாலைப் பணிகள் குறித்து இணையதளத்தில் பதிவேற்றம் செய்தல் தொடர்பாகவும், தொழிலாளர் நலத்துறையின் சார்பில் பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு வீட்டுவசதி திட்டம் உள்ளிட்ட திட்டங்கள் தொடர்பாகவும், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பில், ஊராட்சிகளில் மின் கட்டண நிலுவையை குறைக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல் தொடர்பாகவும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் சார்பில் பட்டா பெயர் மாற்றம் செய்ய கோருவது தொடர்பாகவும், சுகாதாரத்துறையின் சார்பில் பிறப்பு, இறப்பு பதிவில் பெற்றோரின் ஆதார் விபரங்களை மென்பொருளில் பதிவு செய்து இணைப்பது தொடர்பாகவும், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறையின் சார்பில், நடைபாதை அமைத்தும், வனவிலங்குகளில் இருந்து பாதுகாப்பாக இருப்பதற்கு மதில் சுவரும் அமைத்து தருதல் தொடர்பாகவும். பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் கழிவுநீர் வடிகால் அமைத்துத் தரக் கோருதல் தொடர்பாகவும், பெண் தன்னார்வலர் பணியிடங்களை நிரப்புதல் தொடர்பாகவும், மின்சாரத் துறையின் சார்பில், புதிய மின் மாற்றி அமைக்க இடம் தேர்வு செய்ய வேண்டுதல் தொடர்பாகவும், ஈரோடு விற்பனைக்குழு துறையின் சார்பில் நில உரிமை மாற்றம் செய்தல் தொடர்பாகவும், விரிவாக ஆய்வு மேற்கொண்டார். மேலும், மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை விரைந்து முடித்திடவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் சார்பில் சிறப்பாக பணியாற்றிய தோட்டக்கலை உதவி இயக்குநர் சாந்தி அவர்களுக்கும். ஏப்ரல்2026. சிறப்பாக பணியாற்றிய மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுகுத்துறையின் சார்பில் ஈரோடு மாவட்ட குழந்தை உதவி மையம் (1098) வழக்குப் பணியாளர் திருமதி.ம.சுஜாதா அவர்களுக்கும். மே 2026 மாதங்களில் காவல் துறையின் சார்பில் சிறப்பாக பணிபுரிந்த கருங்கல்பாளையம் காவல் நிலையத்தில் பணிபுரியும் காவல் ஆய்வாளர் கந்தசாமி ஆகியோர்களுக்கு பாராட்டி கேடயம் மற்றும் பாராட்டுச்சான்றிதழ்களை வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சு.சாந்த குமார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் செல்வி.கிரண் ஸ்ருதி.இ.கா.ப., மாவட்ட வன அலுவலர் (ஈரோடு) திரு.குமிலி வெங்கட அப்பால நாயுடு இ.வ.ப., திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) திரு.செந்தில்குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.